# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அரையாண்டுத் தேர்வு

## 2018 - 2019

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

## *விடைகள்*

சுட்டெண்:.............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. "கழுநீர் ஆம்பல் முழுநெறிக் குவளை" என்னும் பாடல் இடம் பெறும் நூல்

அ) மணிமேகலை ☐ ஆ) குறுந்தொகை ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ) அகநானூறு ☐

2. நீரைப் பாலாகத் தம் தண்டிலே சேர்த்து வைத்திருக்கும் செடி

அ) கள்ளி ☐ ஆ) நாகதாளி ☐

இ) கற்றாழை ☐ ஈ) முள்ளி ☐

3. அன், ஆர், உம் என்பன

அ) பகுதிகள் ☐ ஆ) விகுதி ☐

இ) இடைநிலைகள் ☐ ஈ ) சந்தி ☐

4. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளுக்குச் சமம் என்பது

அ) விடுகதை ☐ ஆ) பழமொழி ☐

இ) நொடி ☐ ஈ. பாடல் ☐

5. எதிரியை விட அஞ்சத்தக்கவன்

அ) கோழை ☐ ஆ) பகைவன் ☐

இ) இரண்டகன் ☐ ஈ) மாற்றான் ☐

6. உழவர் கஞ்சி குடித்தனர். இதில் கஞ்சி என்ற சொல்

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐

இ) அடைமொழி ☐ ஈ) செயப்படுபொருள் ☐

7. மேற்கிலிருந்து வீசும் காற்று

| | | | |
|---|---|---|---|
| அ) கொண்டல் | ☐ | ஆ) கோடை | ■ |
| இ) வாடை | ☐ | ஈ) தென்றல் | ☐ |

8. நெடிற்றொடர்க் குற்றியலுகரத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு

| | | | |
|---|---|---|---|
| அ) தோடு | ■ | ஆ) அழகு | ☐ |
| இ) எஃகு | ☐ | ஈ) பத்து | ☐ |

9. நான் + கு என்பதைச் சேர்த்து எழுதினால்

| | | | |
|---|---|---|---|
| அ) எனக்கு | ■ | ஆ) தனக்கு | ☐ |
| இ) எமக்கு | ☐ | ஈ) உனக்கு | ☐ |

10. மூவேந்தரது ஒற்றுமையைத் தகர்த்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| அ) ஆரியர் | ■ | ஆ) ஐரோப்பியர் | ☐ |
| இ) சிங்களவர் | ☐ | ஈ) நாயக்கர் | ☐ |

11. பின்வருவனவற்றுள் உருவகவணி

| | | | |
|---|---|---|---|
| அ) மதிமுகம் | ☐ | ஆ) மலர்க்கை | ☐ |
| இ)தேன்மொழி | ☐ | ஈ) அறிவுக்கடல் | ■ |

12. வெண்ணிப்பறந்தலையில் போர் புரிந்தவர்

| | | | |
|---|---|---|---|
| அ) கரிகாற்பெருவளத்தான் | ■ | ஆ) நெடுஞ்செழியன் | ☐ |
| இ) முதுகுடுமிப்பெருவழுதி | ☐ | ஈ) செங்குட்டுவன் | ☐ |

13. மொழிக்கு முதலில் மட்டும் வரும் வினாவெழுத்துகள்

அ) எ, ஏ ☐ ஆ) யா, ஓ ☐

இ) எ, யா ☐ ஈ) ஆ, ஓ ☐

14. நிலமும் பொழுதும்

அ) முதற்பொருள் ☐ ஆ) உரிப்பொருள் ☐

இ) கருப்பொருள் ☐ ஈ ) மெய்ப்பொருள் ☐

15. குழிசி என்பது

அ) வண்டு ☐ ஆ) பானை ☐

இ)பெரிய ☐ ஈ) நெய் ☐

16. கட்புலன் என்பதைப் பிரித்தால்

அ) கட் + புலன் ☐ ஆ) கண் + புலன் ☐

இ) கட்ப் + புலன் ☐ ஈ ) காண் + புலன் ☐

17. கலிங்கத்துப்பரணி__________மன்னனின் வெற்றியைப் பாடுகிறது

அ) சோழ ☐ ஆ) பாண்டிய ☐

இ) சேர ☐ ஈ ) பல்லவ ☐

18. வானளாவிய வளமனை நிரம்பிய இடம் என்பது

அ) தற்குறிப்பேற்றஅணி ☐

ஆ) உவமையணி ☐

இ) உருவகவணி ☐

ஈ ) உயர்வுநவிற்சியணி ☐

19. “தென்னாடு பெற்ற செல்வத் தென்றலே உன் இன்பத்தை” - எனப் பாடியவர்

| | | | |
|---|---|---|---|
| அ) கண்ணதாசன் | ☐ | ஆ) பாவேந்தர் | ☐ |
| இ) காசி ஆனந்தன் | ☐ | ஈ) முடியரசன் | ☐ |

20. நடுநடுங்கி என்பது

| | | | |
|---|---|---|---|
| அ) அடுக்குத்தொடர் | ☐ | ஆ) அடுக்கிடுக்குத்தொடர் | ☐ |
| இ) இரட்டைக் கிளவி | ☐ | ஈ ) இணைமொழி | ☐ |

21. ஆரியச் செல்வாக்கு அரசமட்டத்தில் நுழைந்த காலம்

| | | | |
|---|---|---|---|
| அ) முதற் கழகம் | ☐ | ஆ) கடைக் கழகம் | ☐ |
| இ) இடைக்கழகம் | ☐ | ஈ ) முக்கழகம் | ☐ |

22. பவணந்திஅடிகள் நன்னூலை எழுதிய நூற்றாண்டு

| | | | |
|---|---|---|---|
| அ) 13 | ☐ | ஆ) 11 | ☐ |
| இ) 10 | ☐ | ஈ ) 9 | ☐ |

23. மலைவீழருவி

அ) 6ஆம் வேற்றுமைத்தொகை

ஆ) 5ஆம்வேற்றுமைத்தொகை

இ) 7ஆம் வேற்றுமைத்தொகை

ஈ) 3ஆம் வேற்றுமைத்தொகை

24. பின்வருவனவற்றுள் பகாச்சொல்

அ) மண்

ஆ) மாம்பழம்

இ) அறிஞன்

ஈ) பொன்னன்

25. கழுதை அறியுமா கற்பூர வாசனை. இப்பழமொழி குறிப்பது

அ) ஏமாற்றி அழிக்கும் செயலை

ஆ) சிறப்பறியா இயல்பை

இ) இணைவின் பயனை

ஈ) போலித்தோற்றத்தை

26. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் குமுகாயக் கொடுமைகளைக் கண்டு கனன்று எழுந்த கவிஞர்

அ) திருவள்ளுவர்

ஆ) கனகசுப்புரத்தினம்

இ) பாரதியார்

ஈ) ஔவையார்

27. கவிஞர் தாமரைக் கண்ணன் எழுதிய கவிதை

அ) வெந்ததே சிந்தை ☐ ஆ) ஓங்கு புகழ் கற்கள் ☐

இ) நேரம் இதுதான் ☐ ஈ) எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள் ☐

28. உம்மைத்தொகைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) இரவுபகல் ☐ ஆ) வெண்சுவர் ☐

இ) சுடுசோறு ☐ ஈ) அறுசுவை ☐

29. பெயர்ச்சொல்

அ) உறு ☐ ஆ) வனை ☐

இ) தினை ☐ ஈ) தோறும் ☐

30. “கோதை மாதவி கொழுங்கொடி எடுப்ப, காவும் கானமும் கடிமலர் ஏந்த” இதில் கடிமலர் என்பது

அ) நனிமலர் ☐ ஆ) கொடிமலர் ☐

இ) செடிமலர் ☐ ஈ) நறுமலர் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

அன்பின் அம்மா!

என்னைப் பத்து மாதம் சுமந்து வளர்த்தெடுத்த உங்களுக்கு உங்கள் மகன் எழுதும் கடிதமிது. அம்மா உங்களுக்கு முதல்மூன்று பிள்ளைகளும் பெண்பிள்ளைகளாகப் பிறந்த போது ஓர் ஆண்குழந்தை வேண்டுமென்று நல்லூர்க் கந்தனுக்கு நேர்த்தி வைத்து அதன் பின்பு நான் பிறந்ததாகவும் நீங்கள் சொல்லக் கேட்டேன். வாழ்க்கையை உணரமுடியாத அகவையில் நான் செய்த குழப்படிகளையும் குறும்புகளையும் பொறுத்து என்னை ஒரு மாந்தனாக்க நீங்கள் பட்ட பாடு எனக்குத் தெரியும். தாயகத்தில் நடந்த போரில் உங்கள் மகன் அகப்பட்டு விடக் கூடாது என்பதற்காக என்னை வெளிநாட்டிற்கு அனுப்பினீர்கள். இங்கு வந்த நாள் முதல் எனக்கு நித்திரை இல்லையம்மா. என் மனம் அமைதி கொள்ளவில்லையம்மா.

எனக்கு என் நாடு என் மக்கள் பெரிது அம்மா. என் தாய் நீங்களும் உங்கள் தாயும் தாயின் தாயும் என எங்கள் பரம்பரை வாழ்ந்த மண்ணம்மா எங்கள் மண். நாங்கள் பிறந்ததும் நாலு எழுத்துப் படித்ததும் வயல் விதைத்ததும் அரிவி வெட்டியதும் கூடி மகிழ்ந்ததும் வீடுகட்டி வாழ்ந்ததும் இந்த மண்ணில்தான். எங்கள் வீட்டு முற்றத்தில் கிடக்கிற ஒரு பிடி மண்ணை எடுத்து மணந்து பாருங்கள் அம்மா. எங்கள் பூட்டன், கொப்பாட்டன் வியர்வை மணந்து கொண்டு தான் இருக்கிறது. எங்களின் ஊரில் பெய்கின்ற மழைத் தண்ணீரை அள்ளிப் பருகுங்கள். எங்கள் பரம்பரையின் முகம் எல்லாம் பளிச்சென்று தெரியும் அம்மா.

வெளிநாடு என்று உயிர்தப்பி வந்த நான் எங்கள் மக்களைப்பற்றிச் சிறிதும் நினைக்காமல் உயிர்தப்பி ஓடி வந்து விட்டேன் அம்மா. என் முழு உழைப்பையும் என் உறவுகளுக்கு; தாய் தந்தை அற்ற பிள்ளைகளுக்கு; போரினாலே விதவையாக்கப்பட்ட பெண்களுக்கு; கல்வி பயில்வதற்கு அடிப்படை வசதியே இல்லாமல் இருக்கின்ற எங்கள் பிள்ளைகளுக்கே என் உழைப்பு முழுவதையும் கொடுக்கின்றேன் அம்மா. என் எதிர்காலம் அவர்களுக்கானதே அம்மா.

அன்புடன்
அன்பு மகன்

1. இவ் அஞ்சல் யாரால் யாருக்கு எழுதப்பட்டது?

*மகனால் அம்மாவிற்கு*

2. தன் உழைப்பு முழுவதையும் யார் யாருக்குக் கொடுப்பதாக முடிவு செய்கிறார்?

*தன் உழைப்பு முழுவதையும் தனது உறவுகளுக்கும் போரினால் விதவையாக்கப்பட்ட பெண்களுக்கும் கல்விபயில்வதற்கு அடிப்படை வசதியே இல்லாமல் இருக்கின்ற பிள்ளைகளுக்கும் தாய் தந்தை அற்ற பிள்ளைகளுக்கும் கொடுப்பதாக முடிவு செய்கின்றார்.*

3. மகனின் மனம் அமைதி கொள்ளாதது ஏன்?

*அவன் வெளிநாட்டிற்கு வந்ததால்/ தனது மக்களைப்பற்றி சிறிதும் சிந்திக்காது ஓடி வந்துவிட்டேனே என்று நினைத்து அவன் மனம் அமைதிகொள்ளவில்லை.*

4. தாய் தன் மகனை ஏன் வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தார்?

*தாய் தன் மகனை தாயகத்தில் நடந்த போரில் அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக வெளிநாட்டிற்கு அனுப்பிவைத்தார்.*

5. மகன் சிறு அகவையில் எப்படிப்பட்டவனாக இருந்தான்?

*மகன் சிறு அகவையில் குழப்படிகளையும் குறும்புகளையும் செய்பவனாக இருந்தான்.*

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ''புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்
   பொதிகைத் தென்றல் போலாது ஈங்கு'' இப்பாடல் இடம்பெற்ற காதை எது? இப்பாடலினூடாக எதைச் சிறப்பித்துக் கூறுகிறார்?

   *புறஞ்சேரி இறுத்தகாதை*
   *தென்றலை*

2. கவிஞர் தாமரைக்கண்ணனின் ஏக்கம் என்ன?

   *தமிழ்ப்பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பெயர் சூட்டவில்லையே*

3. இலக்கிய ஆக்கம் என்பது எச்சுற்றுவட்டத்தோடு தொடர்புடையது?

   *படைப்பாளர், பதிப்பாளர், வாசகர், வணிகர்*

4. ஆரியரின் மனுநூல் கூறும் கருத்துகள் இரண்டைத் தருக.

   *கல்வியைக் கேட்டால் காதில் ஈயத்தை உருக்கி ஊற்று,சூத்திரன் வேதம் கற்றால் நாக்கை வெட்டு, யாரிடமாவது கற்றுவிட்டால் அவனது நெஞ்சைப்பிள.*

5. யாரை எதிர்த்துப் போராடுவது வீரமும் நல்லியல்புமாகும்?

   *தனக்கு நிகரான ஆற்றல் உடையோரை எதிர்த்துப் போராடுவது*

6. ஐம்படைத்தாலியில் கோர்க்கப்பட்டிருக்கும் படைக்கருவிகளின் பெயர்கள் எவை?

   *தண்டு, வில், வாள், சங்கு, கடகம்*

7. ''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்தமிழ் கூறும் நல்லுலகம்'' என்று கூறும் நூலின் பெயர் என்ன?

   *தொல்காப்பியம்*

புள்ளிகள் 10

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல், படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக.**
**அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

**அ.**



**ஆ.** மண்ணை நினைத்து விண்ணை அடைந்தவரே !
நம்மை நினைத்து உம்மைக் கொடுத்தவரே!

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

______________________________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. உயிர்முன்உயிர் புணர்தலுக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.

மாவிலை

சேயடி/ சேவடி

கிளியழகு

2. செயப்படுபொருள் குன்றியவினைக்கு இரு சொல்லியங்கள் எழுதுக.

நான் கடைக்குப் போனேன்.

தங்கை அழுதாள்.

3.

எடுத்துக்காட்டுகள் தருக.

உரிச்சொல் சால, உறு, தவ, நனி

பிறவினை எழுதுவித்தான்

இடைச்சொல் அன், ஆன், ஐ, ஆல்

( இவ்வாறு பொருத்தமான விடை)

பெயரெச்சம் அழுத

குறிப்புவினைமுற்று அவன் பொன்னன்.

திரிசொல் வாரணம்

4. சொற்பொருள் தருக.

| | | | |
|---|---|---|---|
| முந்நீர் | கடல் | தேறல் | மது |
| புன்கண் | துன்பம் | மீமிசை | மேலே /உயரத்தில் |
| நறை | தேன் | கூடல் | மதுரை மாநகர் / மதுரை |

5. பின்வருவனவற்றிற்கு இவ்விரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

| | | |
|---|---|---|
| வன்தொடர்க்குற்றியலுகரம் | பத்து | உப்பு |
| மென்தொடர்க்குற்றியலுகரம் | பஞ்சு | பந்து |
| உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் | அழகு | முரசு |

புள்ளிகள் 15

6) **பந்தியை வாசித்து மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

அறிவியற் கருவிகளும் தொழில்நுட்பத்திறன்களும் வளர்ச்சியடைந்து மாந்தன் மகிழ்ச்சியுடன் வாழுங்காலம் இது. அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்து விட்டநிலையில் மின் ஆற்றலுக்குப் பஞ்சமும் தோன்றிவிட்டது. மின் ஆற்றல் போதாமல் அணு ஆற்றல், வெப்ப ஆற்றல் இவைகளைப் பெரிதும் நம்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இயற்கைச் செல்வங்களின் அழிவு, தூய்மையற்ற காற்று, குடிக்கும் நீரில் பல்வேறு நச்சுப்பொருட்கள் கலந்திருத்தல் என்பவற்றால் மாந்த வாழ்வில் கேடு உண்டாகிறது. சூழல் மாசடைவதற்கு மாந்தனின் நடவடிக்கைகளே காரணமாகும்.காற்றிலும் நீரிலும் கலக்கும் மாசுகளாலும் இரைச்சல்களாலும் ஏற்படும் கேடுகள், தொழிலாலைக் கழிவுகளால் சூழல் மாசுபடுதல் ஆகியவற்றை மாந்தன் கருத்தில் கொள்வதில்லை. இதனால், நாளுக்கு நாள் நோய்கள் பெருகி வருகின்றன. உலகின் பெரும் பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது. ஆனால், குடிப்பதற்கு மழைநீர் மட்டுமே பயன்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதினால் மழை குறைந்து விட்டது. தொழிலாலைக் கழிவுகள் ஆறுகளிலும் ஏரிகளிலும் குவிக்கப்படுகின்றன. தொழிலாலைகளிலிருந்து வெளிவரும் காற்றும் புகையும் சூழலில் கலந்து நச்சுத்தன்மையை ஏற்படுத்துகின்றன. உந்துகள் வெளிவிடும் நச்சுப்புகையும் வெடிகுண்டு ஆய்வுகளால் வெளிவரும் நச்சுப்புகையும் காற்றை மாசடையச் செய்கின்றன. இச்சீர் கேடுகளால் மக்களின் அன்றாட வாழ்வில் பெருந்தாக்கம் ஏற்படும்.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **தென்றல் வரவு**

- **துரித உணவுகளும் மக்களும்**

  *துரித உணவை ஏன் மக்கள் விரும்புகிறார்கள்?*

  *அதனால் ஏற்படும் விளைவுகள்.*

- **நீங்கள் ஒரு தமிழ்த் தொண்டரானால்**

புள்ளிகள் 20